

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 334

திங்கட்கிழமை
27 ஒக்ரோபர் 2025

ஐப்பசி 10 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## ஜனாதிபதி அநுர தலைமையில் விசேட அமைச்சரவைக் கூட்டம்

கொழும்பு, ஒக்.27
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் எதிர்வரும் 7ஆம் திகதி காலை விசேட அமைச் சரவைக் கூட்டமொன்று நடைபெறவுள்ளது.
2026 ஆம் ஆண்டுக்கான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டம் நவம்பர் மாதம்

☞ 11

போதைப்பொருள் ஒழிப்பில்

# இறுக்கமான நடவடிக்கை வடமாகாணத்தில் தேவை

## சமூகமட்ட அமைப்புகள் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 27
போதைப்பொருள் ஒழிப்பு தேசிய வேலைத்திட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளில் விசேட கவனம் செலுத்தப்படவேண்டும் என்று சமூக மட்ட அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

☞ 11



## போதைப்பொருளுக்கு எதிராக

## கடந்த 10 மாத காலத்தில் சுமார் 2 லட்சம் வழக்குகள்

கொழும்பு, ஒக்.27
இந்த ஆண்டின் ஜனவரி முதலாம் திகதிமுதல் கடந்த 22ஆம் திகதிவரையான சுமார் 10 மாத காலப்பகுதியில் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக நாட்டில் ஒரு இலட்சத்து 87 ஆயிரத்து 672 வழக்குகள் நீதிமன்றங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
இந்தக் காலப்பகுதியில் பாதுகாப்புப் பிரிவால்

☞ 11

## மாகாணசபைத்தேர்தலை விரைவாக நடத்தத்திட்டம்

### காற்றுள்ளபோது தூற்றிக்கொள்ள காய்நகர்த்ததும் அரசாங்கம்

கொழும்பு, ஒக்.27
மாகாணசபைத் தேர்தலை இயலுமானவரை விரைவில் நடத்துவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.
அதற்கான ஓர் முக்கியமான

☞ 11

## மருந்தாளர் இன்மையால் அல்லாடும் நோயாளர்கள்

### அரச மருந்தாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக்.27
நாட்டிலுள்ள மருத்துவமனைகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருந்தாளர்களுக்கு வெற்றிடங்கள் உள்ளன என்று அரச மருந்தாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.
இந்த வெற்றிடங்கள் காரண

☞ 11

## போதைப்பொருள் ஒழிப்புத் திட்டம் தேசிய ரீதியில் இவ்வாரம் ஆரம்பம்

கொழும்பு, ஒக்.27
போதைப்பொருள் ஒழிப்பு தேசிய வேலைத்திட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால அறிவித்துள்ளார்.
இந்த வேலைத்திட்டம், 'தேச ஒருமைப்பாடு - தேசிய

☞ 11





## இலங்கையை வேகமாக ஆக்கிரமிக்கின்றது 'ஏஐ'

### உலக வங்கி தகவல்

கொழும்பு, ஒக்.27
இலங்கை உட்பட தெற்காசியாவில் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு வேகமாக அதிகரித்துள்ளது என்று உலக வங்கி தனது அறிக்கையொன்றில் சுட்டிக் காட்டியுள்ளது.
தெற்காசியாவின் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு தொழிலாளர் சந்தையில் ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
அந்த அறிக்கையில் தெரிவிக்

☞ 11



## வெலிகம தவிசாளர் கொலை; துப்பாக்கிதாரி கைது

கொழும்பு, ஒக்.27
வெலிகம பிரதேச சபைத் தவிசாளர் லசந்த விக்ரமசேகரவின் கொலையுடன் தொடர்புடைய துப்பாக்கிதாரி எனக் கருதப்படும் நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

☞ 11

### முச்சந்தி முரளி

'மற்ற விசயங்களிலதான் சுணக்கம், போதைப்பொருள ஒழிக்கிற விசயத்தில எண்டாலும் வடக்க கவனிக்கிறினமோ எண்டு பாப்பம்'

## காங்கேசன்துறை – நாகப்பட்டினம் படகுச்சேவை தற்காலிக நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஒக்.27
காங்கேசன்துறைக்கும் நாகப்பட்டினத்துக்கும் இடையிலான பயணிகள் படகுச் சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. வடகிழக்குப் பருவமழை ஆரம்பித்துள்ளதை அடுத்தே தற்காலிகமாக படகுச்சேவை நிறுத்தப்பட்டுள்ளது என்றும், எதிர்வரும் டிசெம்பர் மாதம் மீண்டும் படகுச்சேவை ஆரம்பிக்கப்படும் என்றும்

☞ 11

## சிறார்களின் கைகளில் கைபேசிகளுக்கு 'தடா'

### ஆலோசிக்கின்றது அரசாங்கம்

கொழும்பு, ஒக்.27
12 வயதுக்குட்பட்ட பாடசாலைச் சிறார்கள் கைபேசிகள் (ஸ்மார்ட் போன்) பயன்படுத்துவதைத் தடை செய்வது தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது என்று மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர்

☞ 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
- திகதி: 26.10.2025
- சீட்டிழுப்பு இலக்கம்: 4236
- ஆங்கில எழுத்து: O
- வெற்றி இலக்கங்கள்: 14 51 69 79
- விசேட எழுத்து: O

**ஹந்தஹன ராசி சுப பலன்**
- திகதி: 26.10.2025
- சீட்டிழுப்பு இலக்கம்: 1303
- வெற்றி இலக்கினம்: ரிஷபம்
- வெற்றி இலக்கங்கள்: 03 13 24 30

**NLB ஜய**
- திகதி: 26.10.2025
- சீட்டிழுப்பு இலக்கம்: 0262
- ஆங்கில எழுத்து: I
- வெற்றி இலக்கங்கள்: 5 1 1 8

**மெகா பவர்**
- திகதி: 26.10.2025
- சீட்டிழுப்பு இலக்கம்: 2342
- ஆங்கில எழுத்து: K
- சுப்பர் இலக்கம்: 11
- வெற்றி இலக்கங்கள்: 03 06 39 72

**மஹஜன சம்பத**
- திகதி: 26.10.2025
- சீட்டிழுப்பு இலக்கம்: 5994
- ஆங்கில எழுத்து: G
- வெற்றி இலக்கங்கள்: 4 5 0 4 8 4

**தன நிதானய**
- திகதி: 26.10.2025
- சீட்டிழுப்பு இலக்கம்: 2024
- ஆங்கில எழுத்து: H
- வெற்றி இலக்கங்கள்: 15 60 79 80
- விசேட எழுத்து: H

**அத சம்பத**
- திகதி: 26.10.2025
- சீட்டிழுப்பு இலக்கம்: 0569
- ஆங்கில எழுத்து: G
- வெற்றி இலக்கங்கள்: 0 4 8 4

**சுப தவசக்**
- திகதி: 26.10.2025
- சீட்டிழுப்பு இலக்கம்: 0110
- வெற்றி இலக்கினம்: ரிஷபம்
- வெற்றி இலக்கங்கள்: 18 22 55

# போதைப்பொருள் நடத்தைகளால் அதிகரிக்கும் பாலியல் தொற்றுகள்

## சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை



**கொழும்பு, ஒக்.27**

**இலங்கையில் ஒரு இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதுகாப்பற்ற பாலியல் மற்றும் போதைப் பொருள் நடத்தைகளில் ஈடுபடுகின்றனர். இதுகுறித்து உரிய நடவடிக்கைகளை எடுக்காத பட்சத்தில் எதிர்வரும் ஆண்டுகளில் எச்.ஐ.வி. மற்றும் ஏனைய பாலியல் ரீதியான நோய்கள் அதிகரிக்கக்கூடும் எனச் சுகாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

சுகாதார அமைச்சின்கீழ் உள்ள தேசிய பாலியல் தொற்று எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்படி, நாடுமுழுவதும் ஒரு இலட்சத்து 27,511 பேர் அதிக ஆபத்துள்ள பாலியல் நோய் நிலைமைகளுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதில் பெண் பாலியல் தொழிலாளர்கள், ஆண்களுடன் உடலுறவு கொள்ளும் ஆண்கள், போதை மருந்துகளைச் செலுத்துபவர்கள் ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

இலங்கையில் தற்போது சுமார் 6 ஆயிரம் பேர் எச்.ஐ.வி.த் தொற்றுடன் வாழ்ந்துவருகின்றனர் எனத் தரவுகள் கூறுகின்றன. பெரும்பாலும் மேல் மாகாணத்திலும் காலி, கண்டி, குருநாகல், அநுராதபுரம், மாத்தறை மற்றும் பதுளை ஆகிய இடங்களில் இருந்தும் அதிக தொற்று விகிதங்கள் பதிவாகியுள்ளன.

2024 ஆம் ஆண்டில் 39,547 நபர்கள் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளாகியுள்ளனர். 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், 5,700 பேர் எச்.ஐ.வி.யுடன் வாழ்ந்து வந்துள்ளனர். இந்தாண்டு இதுவரை 10 எய்ட்ஸ் தொடர்பான இறப்புகள் பதிவாகியுள்ளன.

இந்தநிலையில் பாடசாலைகள் முதலே பாலியல் கல்வியின் அவசியத்தையும் பாதுகாப்பற்ற பாலியல் நடைமுறைகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

**சுபிரி தன சம்பத**
- திகதி: 26.10.2025
- தினம்: ஞாயிற்றுக்கிழமை
- வெற்றி வாரம்: 0702
- ஆங்கில எழுத்து: Y
- வெற்றி இலக்கம்: 2 8 7 5 8 3

**Super Ball**
- திகதி: 26.10.2025
- தினம்: ஞாயிற்றுக்கிழமை
- சீட்டிழுப்பு வாரம்: 2968
- ஆங்கில எழுத்து: E
- வெற்றி இலக்கம்: 04 20 55 63

**சனிதா**
- திகதி: 26.10.2025
- தினம்: ஞாயிற்றுக்கிழமை
- ஆங்கில எழுத்து: Y
- வெற்றி இலக்கம்: 01 10 54 75
- வெற்றி வாரம்: 5029

**SASIRI**
- திகதி: 26.10.2025
- தினம்: ஞாயிற்றுக்கிழமை
- வெற்றி வாரம்: 0800
- வெற்றி இலக்கம்: 07 18 30

**லக்ன ராசி**
- திகதி: 26.10.2025
- தினம்: ஞாயிற்றுக்கிழமை
- மிதுனம்
- வெற்றி இலக்கம்: 15 25 33 39
- சீட்டிழுப்பு வாரம்: 4680

**KAPRUKA**
- திகதி: 26.10.2025
- தினம்: ஞாயிற்றுக்கிழமை
- ஆங்கில எழுத்து: S
- சுப்பர் இலக்கம்: 03
- வெற்றி இலக்கம்: 12 32 44 47
- வெற்றி வாரம்: 2144

**அத கோடிபதி**
- திகதி: 26.10.2025
- தினம்: ஞாயிற்றுக்கிழமை
- ஆங்கில எழுத்து: G
- வெற்றி இலக்கம்: 03 44 56 76
- வெற்றி வாரம்: 2794

**JAYODA**
- திகதி: 22.10.2025
- தினம்: புதன்கிழமை
- ஆங்கில எழுத்து: V
- வெற்றி இலக்கம்: 19 20 29 67
- வெற்றி வாரம்: 2172

# தந்தை செல்வாவின் மகள் கனடாவில் மறைவு



கொழும்பு, ஒக்.27

தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகத் தலைவரான தந்தை செல்வா எனப்படும் எஸ். ஜே.வி. செல்வநாயகத்தின் மூத்தமகள் சுசீலாவதி வில்சன் தனது 97 ஆவது வயதில் கனடாவில் இறைவனடி எய்தினார்.

இவர் தனது தாயாருடன் இணைந்து, 1950-1960களில் இலங்கை தமிழரசுக் கட்சியின் பரப்புரை நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்து இலங்கை தமிழரசுக் கட்சியின் வளர்ச்சிக்கு ஆரம்ப காலத்தில் பிரதான பங்களிப்பை வழங்கினார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சுசீலி பட்டப் படிப்பை முடித்தவர். அங்குதான் அவர் தனது கணவராகிய பேராசிரியர் அல்பிரட் ஜெயரத்தினம் வில்சன் அவர்களைச் சந்தித்து மணமுடித்தார்.

பேராசிரியர் ஏ.ஜே. வில்சன், இலங்கையின் அரசியல் குறித்துப் பல நூல்களை எழுதிய புகழ்பெற்ற கல்விமானாக விளங்கியவர். பிற்காலத்தில் சுசீலி, ஐக்கிய இராச்சியத்தில் ஒரு தொழில்முறை நூலகராகத் தகுதிபெற்று, தனது கணவரின் கல்வி மற்றும் ஆய்வுப் பணிகளுக்கு உறுதுணையாக இருந்தார். கனடாவில் குடியேறிய பின்னர், அவர் நியூ பிரன்சுவிக் பல்கலைக்கழகத்தில் நூலகராகப் பணியாற்றினார். தந்தை செல்வாவின் மூத்த மகள் சுசீலாவதி (சுசீலி) வில்சனின் மறைவுக்கு இலங்கை தமிழரசுக் கட்சி ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளது. (ச-இ)



# கொலைக்கலாசாரம் தலைதூக்குகின்றது

## சஜித் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக்.27

நாட்டில் எந்தச் சந்தர்ப்பத்தில் எங்கு துப்பாக்கிச்சூடு நடக்கும் என்பதை ஊகிக்க முடியாமலுள்ளது. இந்த நிச்சயமற்ற நிலை மற்றும் பாதுகாப்பின்மை காரணமாக மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்திடம் முறையான வேலைத்திட்டங்கள் எவையும் இல்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களை வாழவைப்பதுதான் ஒரு அரசாங்கத்தின் கொள்கையாக அமைந்திருக்கவேண்டும். ஆனால் இன்று நாட்டில் கொலைக்கலாசாரம் தலைதூக்கியுள்ளது. இவ்வாண்டில் மாத்திரம் அதிக எண்ணிக்கையிலான துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இன்று சமூகத்தில் கொலைகளும் திட்டமிட்ட குற்றச் செயல்களும் வெகுவாகவும் சர்வசாதாரணமாகவும் இடம்பெற்றுவருகின்றன. எனவே 220 இலட்சம் மக்களின் உயிரைப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்- என்றார். (ச-இ)

# பிழையை மூடிமறைக்கும் அரசின் செயல் கீழ்த்தரம்

## நாமல் விளாசல்

ஒருவர் இறந்த பிறகு, அவரின் கடந்த காலச் செயல்களைப் பற்றிப்பேசி, கொலையை மறைக்கும் வகையில் அமைச்சர் ஆனந்த விஜேபால நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை வேதனைக்குரியது என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், கொலை செய்யப்பட்ட வெலிகம பிரதேசசபைத் தவி சாளர், தனக்குப் பாதுகாப்பு தேவை என்று பொலிஸ்மா அதிபரிடம் தெரிவித்துள்ளார். ஆனால் தேவையான பாதுகாப்பு வழங்கப்படவில்லை.

ஒருவர் இறந்த பிறகு, அவரது கடந்த கால செயல்களைப் பற்றிப்பேசி, கொலையை மறைக்கும் வகையில் அரசாங்கம் செயற்படுவது கீழ்த்தரச் செயலே.

எனவே, மக்கள் பிரதிநிதிகளின் பாதுகாப்பை உறுதிசெய்வதுடன் துப்பாக்கிச்சூட்டுக் கலாசாரத்தை உடன் நிறுத்த வேண்டும் – என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலா எனும் போர்வையில் காணியை அபகரிக்காதீர்கள்

## மணற்காடு கிராமமக்கள் கோரிக்கை



யாழ்ப்பாணம்,ஒக்.27

வடமராட்சி கிழக்கு, மணற்காட்டில் சுமார் 600 ஏக்கர் காணியை, சுற்றுலா அபிவிருத்தி எனும் போர்வையில் அபகரிக்கத் திட்டமிட்டுள்ளனர். எனவே உரியவர்கள் இந்த முயற்சியை உடனடியாகக் கைவிடவேண்டும் என்று மணற்காடு கிராமமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் மணற்காடு கிராமமட்ட அமைப்பினர் நேற்றுமுன்தினம் ஊடக சந்திப்பை நடத்தி இதனைத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கற்கோவளத்துக்கும், மணற்காட்டுக்கும் இடைப்பட்ட பகுதியில் 300 ஏக்கர் காணியும், மணற்காட்டுக்கும் பொற்பதி கிராமத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் 300 ஏக்கர் காணியும் சுற்றுலாத் தேவைகளுக்காக அபகரிக்கப்படவுள்ளன. மணற்காடு கிராமத்திலுள்ள மக்கள் பலருக்குக் குடியிருக்கவே காணியில்லாத நிலையில், எமது கிராமக் காணியை அபகரிக்கும் முயற்சியை ஏற்றுக்கொள்ளமுடியாது. இதனை நாங்கள் கடுமையாக எதிர்க்கின்றோம். எனவே சம்பந்தப்பட்ட தரப்புகள் உரிய கவனமெடுத்து, காணி அபகரிக்கும் நடவடிக்கையை உடனடியாகக் கைவிடவேண்டும்- என்றனர். (க-27)

# தாய்லாந்து யானைகள்; ஆராய்வதற்குக் குழு!

கொழும்பு, ஒக்.27

தாய்லாந்து அரசாங்கத்தினால் இலங்கைக்கு அன்பளிக்கப்பட்ட இரண்டு யானைகள் குறித்து ஆராய்வதற்காக கால்நடை மருத்துவக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று சுற்றாடல் பிரதி அமைச்சர் அன்டன் ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

தாய்லாந்து அரசாங்கத்தினால் அன்பளிக்கப்பட்ட 'தாய் ராஜா' மற்றும் 'கண்டுல' ஆகிய இரண்டு யானைகளும் மீண்டும் தாய்லாந்துக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளதாக வெளியான செய்திகளை அடுத்து இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு யானைகளுக்கும் துன்புறுத்தல் இழைக்கப்படுவதாகக் கூறி தாய்லாந்து அரசாங்கம் அவற்றை மீண்டும் நாட்டிற்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கும் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதுதொடர்பாக இலங்கை அரசாங்கத்துடன் பேச்சு நடத்தவும் தாய்லாந்து தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னர், அலுத்கம விகாரையில் இருந்த 'முத்து ராஜா' என்ற யானைக்கும் துன்புறுத்தல் இழைக்கப்பட்டதால் தாய்லாந்து அரசாங்கம் அதனை மீளப் பெற்றிருந்தது.

இந்தநிலையில் குறித்த இரண்டு யானைகள் தொடர்பிலும் ஆராய்வதற்காகக் கால்நடை மருத்துவக்குழு நியமிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# போலி வட்ஸ்அப் குழு


## கல்வியமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.27

போலி வட்ஸ்அப் குழு ஒன்று தொடர்பில் கல்வி, உயர்கல்விமற்றும்தொழிற் கல்வி அமைச்சகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

புதிய கல்விச் சீர்திருத்தங்கள் மூலம் உருவாக்கப்படும் கல்விப் பேரவை என்ற பெயரில் செயற்படும் ஒரு மோசடி வட்ஸ் அப் குழு குறித்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு அமைச்சுடன் இணைக்கப்படவில்லை அல்லது அங்கீகரிக்கப்படவில்லை எனக் கல்வி அமைச்சு அறிக்கை வெளியிட்டுள்ளது. (ச-இ)



# தேங்காய் திருட்டு

யாழ்ப்பாணம்,ஒக்.27

கொழும்புத்துறைப் பிரதேசத்தில் தேங்காய் திருடர்களின் கைவரிசை அதிகரித்துள்ளது. வெற்றுக்காணிகள், மற்றும் ஆட்கள் குடியிருக்காத வீடுகளில் உள்ள தென்னை மரங்களில் பட்டப்பகலில் நாளாந்தம் இவ்வாறு தேங்காய் திருடப்படுகின்றது.

தேங்காயின் விலை அதிகரித்துள்ளதை அடுத்து திருடர்கள் தொடர்ச்சியாக கைவரிசை காட்டிவருகின்றனர் என்றும் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்தனர். (க-17)

# வெலிகம துப்பாக்கிச்சூடு: பெண் உட்பட மூவர் கைது

கொழும்பு, ஒக்.27

வெலிகம பிரதேசசபை தவிசாளர் லசந்த விக்ரமசேகரவின் கொலைச் சம்பவம் தொடர்பில் மூவர் நேற்று குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கெகிராவப் பிரதேசத்தில் வைத்து இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. கைதுசெய்யப்பட்ட மூவரில் ஒரு பெண்ணும் அடங்குகிறார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. (ச-இ)




## இஞ்ச என்னத்துக்கு அவை?-2

இஞ்ச எடுக்கிற படத்துக்கு இந்திய சினிமாக்காரரைக் கொண்டுவாறதால நன்மையைவிடவும் நட்டம் தான்கூட. சிலவேளை உந்தப்படம் வெண்டால் "தமிழக சினிமாக்காரர் வந்து தொடக்கிவைச்சு, பப்ளிசிட்டி குடுத்ததாலதான் படம் ஓடினது" எண்டு தானே பாக்கிறவை சொல்லுவினம். கஷ்டப்பட்டு கதை எழுதி, அதுக்கு உயிரைக் குடுத்துப் படமாக்கின வையின்ர உழைப்பின்ர பெறுமதியெல்லாம், இந்த சினிமா நட்சத்திரங்களின்ர மாயைக்குள்ள மறைஞ்சுபோடும். பிறகு இஞ்ச படம் எடுக்கிறவை எல்லாரும், "படம் எடுத்து வெல்லவேணும் என்டால் இந்திய சினிமாக்காரரைக் கொண்டரவேணும்" எண்டதை ஒரு சட்டமா பின்பற்றத் தொடங்கிடுவினம்.

இஞ்ச எடுக்கிற படங்களின்ர மொத்தச் செலவுத் தொகை அஞ்சாறு கோடியளுக்கதான் இருக்கும். ஆனால் இப்பிடி படத்தொடக்கவிழா, பாடல் வெளியீட்டு விழா எண்டு இந்திய சினிமாக்காரரை இறக்குமதி செய்யிறதுக்கே ரண்டு,மூண்டு கோடிக்குக் கிட்ட வரும். அவையள் வாற பிளைட் ரிக்கெற், தங்குமிடம், சாப்பாடு, அதைவிட அவைக்குத் தனியாச் சம்பளம் எண்டு கணக்குப் பார்த்தாலே இந்தமுறை படத் தொடக்கவிழாவுக்கு இந்தியாவில இருந்து வாறவைக்கு ரண்டு,மூண்டுகோடியாவது குடுக்கவேணும். ஆனால் அந்தக் காசிலையே ஒரு நல்லபடம் எடுத்துப்போடலாம்.

இன்னொரு சினிமாப்படம் எடுக்கிற எங்கட பெடியள், அதில இந்தியாவில இருந்து குணச்சித்திர நடிகர் மாரைக் கொண்டந்து இஞ்சத்தைப் படத்தில நடிக்க வைக்கினம். "அவங்களையே கூட்டியந்து நடிக்க வைக்கிற அளவுக்குப் பெரியாக்கள் ஆகிட்டாங்களே?" எண்டு எல்லாருக்கும் வயிறு எரியும். ஆனால் இதுக்க இன்னொரு உண்மையும் இருக்கு. என்னதான் நாங்கள் எங்கட தரமான படைப்பை எடுத்தாலும், அதை வெளியில கொண்டுபோய்ச் சேர்க்க, ஏதோ ஒரு வகையில இந்தியாக்காரரைத்தான் நம்பியிருக்கவேண்டியிருக்கு. இப்பிடி அவையில தங்கியிருந்தால் எப்பிடி நாங்கள் சினிமாவில சாதிக்கமுடியும். அப்பிடிச் சாதிச்சாலும், இந்தியக்காரருக்கு இருக்கிறமாதிரிபடம்பாக்கிறதுக்கெண்டு ஆக்கள் இல்லையே எண்டு புலம்பிறவையும் இருக்கினம். அவைக்கு ஒண்டைச் சொல்லலாம். இந்தியாவில இருக்கிற மொழியளில கன்னடமும் ஒண்டு. அந்தக் கன்னட மொழியில வாற படங்களை எல்லாம் 'மொக்கைப் படங்கள்' எண்டு ஆரும் பாக்கிறேலை. ஆனால் காந்தாரா எண்ட கன்னடப் படம் முந்தின தடையளைத்தாண்டி உலகம் முழுக்க கன்னடப்படங்களுக்கு ஒரு மதிப்பை வாங்கிக் குடுத்திருக்கு. அப்பிடி எங்கட படங்களையும் நல்ல கதையோட, சரியான நடிகர்களோட எடுத்தால் கன்னடப் படங்களையும்விட சாதிக்கலாம் கண்டியளோ

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய
(ராசிபலன்)

**மேடம்:** கணவன் –மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவுசெய்யநேரும். வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், வெளியில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**மிதுனம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள்.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும்.

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. இன்று குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்ப தைத் தவிர்க்கவும். சிலருக்கு குடும்பத்துடன் கோயி லுக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்படும்.

**துலாம்:** சாதிக்கும்நாளாகஅமையும். வாழ்க்கைத் துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்தநாள்.


**தனுசு:** மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதாக இருந்தால் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.

**மகரம்:** புதிய முயற்சிகளையும் பயணங்களையும் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறிய அளவில் உடல் நலம் பாதிக்கப்பட்டாலும், எளிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும்.

**கும்பம்:** மகிழ்ச்சிதரும் நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்து நல்ல செய்தி கிடைக்கக்கூடும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாகமுடியும். உறவினர்கள்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

# மட்டக்களப்பில் மினி சூறாவளி



மட்டக்களப்பு, ஒக்.27

மட்டக்களப்பு மாவட்டத்தில் மழையுடன் மினி சூறாவளி கடந்த வெள்ளிக்கிழமை வீசியதில் 68 வீடுகளின் கூரைகள் வீசி எறியப்பட்டு சேதமடைந்துள்ளன என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மண்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள புதூர் சேத்துக்குடா உட்படப் பல பிரதேசங்களில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

மேலும், மரங்கள் முறிந்து வீழ்ந்ததுடன் சிலமணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்டதுடன் பாதிக்கப்பட்டவர்கள் உறவினர் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)



# இரத்ததான முகாம்

மன்னார், ஒக்.27

மன்னார் பேசாலை வெற்றி சிறகுகள் அமைப்பின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனையின் இரத்த வங்கியின் உதவியுடன் மருத்துவர்கள் இணைந்து நடத்திய இரத்ததான முகாம் பேசாலைப் பிரதேச மருத்துவமனையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனையின் வேண்டுகோளுக்கமைவாகவும், மாவட்ட மருத்துவமனை இரத்தவங்கியில் ஏற்பட்டுள்ள குருதித்தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும் வகையிலும் குறித்த இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. (ச-41-56)

# சூரன்போர்

யாழ்ப்பாணம்,ஒக்.27

வடகோவைச் சித்திரவேலாயுதர் ஆலயத்தில் கந்தசஷ்டி உங்சவத்தின் இறுதிநாளான சூரன்போர் உற்சவம் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு சிறப்பு அபிஷேகத்துடன் இடம்பெறும். தொடர்ந்து மாலை 6 மணிக்கு சண்முகப்பெருமான் எழுந்தருளி சூரசங்காரம் இடம்பெறும். (க-17)

★ ★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.27


நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் இன்றுதிங்கட்கிழமை சூரசங்காரம் இடம்பெறும். நண்பகல் 12 மணிக்கு வேல் வழங்கும் காட்சியும், பிற்பகல் 3 மணிக்குச் சூரன் போரும் இடம்பெறும். (க-17)

★ ★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.27

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய சூரசம்கார நிகழ்வு இன்று திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு வசந்த மண்டப பூஜையுடன் இடம்பெற்று அதனைத் தொடர்ந்து சூரசங்காரம் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-159)

தம்பசிட்டி மலையந்தோட்டம் முருகன் கோவிலில், கந்த சஷ்டி திருவிழாவின் மூன்றாம் நாள் பூசை வழிபாடுகள், கடந்த வெள்ளிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றன. (க-100)





# நிதி முகாமைத்துவம் குறித்து பெண்களுக்குக் கருத்தரங்கு

பளை, ஒக். 27

பச்சிலைப்பள்ளிப் பிரதேச பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு நிதி முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

உதவிப் பிரதேச செயலர் திருமதி ச.குணஜா தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் வளவாளராக பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் மு. ரதிதேவி கலந்துகொண்டார். (ச-25, 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# சர்வதேசத் தலைகுனிவு..!

இலங்கைக்கு வழங்கப்பட்ட மேலும் இரண்டு யானைகளைத் திரும்பப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது தாய்லாந்து அரசாங்கம். தம்மால் வழங்கப்பட்ட அந்த இரண்டு யானைகளையும் இலங்கை மோசமாகப் பராமரித்து வருவதால் ஏற்பட்ட அதிருப்தி காரணமாகவே, அவற்றைத் திரும்பப் பெறுவதற்குத் தாய்லாந்து அரசாங்கம் தயாராகியுள்ளது. யானைகளைப் பராமரிப்பதில் ஏற்பட்ட அதிருப்தியால், தாய்லாந்து அவற்றைத் திரும்பப் பெறுவது இதுவொன்றும் முதல் முறையல்ல. 2023ஆம் ஆண்டிலும் 'சக் சுரின்' என்று அறியப்பட்ட யானையொன்று இலங்கையிடம் இருந்து தாய்லாந்தால் திரும்பப் பெறப்பட்டது. அதன் தொடர்ச்சியான நடவடிக்கையாகவே தற்போதைய செயற்பாடுகள் அமைந்துள்ளன. ஆக, 'இலங்கையில் யானைகள் முறையாகப் பராமரிக்கப்படுவதில்லை. அவை ஜீவகாருண்யத்துக்கு முரணான முறையில் நடத்தப்படுகின்றன' என்ற தோற்றப்பாடு தற்போது சர்வதேச மட்டத்தில் ஏற்பட்டுள்ளது.

இலங்கைக்கும் யானைகளுக்கும் இடையிலான தொடர்பு பின்னிப் பிணைந்தது. இந்த நாட்டை மேலும் அழகூட்டும் விடயங்களாக யானைகள் உள்ளன. யானைகளை நீக்கிவிட்டு, இலங்கையின் சுற்றுலாத்துறை தொடர்பில் கதைத்துவிடவோ அல்லது திட்டமிடவோ முடியாது. தேசியப் பொருளாதாரம் என்ற ரீதியில் யானைகள் இந்தத் தீவை வாழ்வித்துக் கொண்டிருக்கின்றன. அத்துடன், மத ரீதியாகவும் வரலாற்று ரீதியாகவும்கூட யானைகளுக்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்புகள் ஆழமானவை. இவ்வாறிருக்கையில், இலங்கையில் யானைகள் துன்புறுத்தப்படுகின்றன என்று வெளிப்படும் செய்திகள் சாதாரண விடயங்கள் அல்ல. இதுவொரு 'தேசிய அவமானம்'. இலங்கையுடனான தூதரக உறவுகள், இராஜதந்திர உறவுகள் என எதையும் கருத்திற்கொள்ளாமல், அவற்றைத் தாய்லாந்து திரும்பப் பெறுவதன்மூலம் இது எவ்வளவு வலிமையான விடயம் என இலங்கை புரிந்துகொள்ளவேண்டும்.

வாழிட மோதல்களாலும், அபிவிருத்தி என்ற பெயரில் வனங்களை ஊடறுத்து அமைக்கப்பட்ட ரயில் தண்டவாளங்களாலும் யானைகள் வகைதொகையின்றி இலங்கையில் செத்து மடிகின்றன. கடந்த மாதத்தில் இத்தனை யானைகள் இறப்பு, இந்த மாதத்தில் இத்தனை யானைகள் இறப்பு என்று புள்ளிவிவரங்களை வெளியிடுவதுடன் அரசாங்கம் தனது பணிகளை முடித்துக் கொள்கின்றது. அதைத்தவிர, யானைகளைப் பாதுகாப்பதற்காக எந்தக் காத்திரமான நடவடிக்கைகளையும் எடுத்ததாக இல்லை. எனவே, யானைகளைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தையும் அவற்றால் இந்த நாடு அடையும் பயன்களையும் கருத்திற்கொண்டு அரசாங்கம் விரைவாகச் செயற்பட வேண்டும். புதிய திட்டங்கள் உடனடியாக வகுக்கப்படவேண்டும்.


எந்தவொரு நாட்டில் யானைகள் அதிகளவு காணப்படுகின்றனவோ அந்த நாட்டின் வனப்பகுதிகள் வளம் மிக்கவையாகக் காணப்படும் என்பது வனவியல் ஆய்வாளர்களின் கருத்து. இந்தக் கருத்தின் ஆழத்தை - அதன் தார்ப்பரியத்தை புரிந்து கொள்வதற்கு அரசாங்கம் முயலவேண்டும். யானைகளுக்கு ஏற்படும் - ஏற்படுத்தப்படும் அழிவு, இலங்கையின் பாரம்பரியத்தின் மீதான தாக்குதலாகவே கருதப்பட வேண்டும். அதுவே உண்மையும்கூட.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493-1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


நாளொரு நல்வார்த்தை

உங்களால் விமர்சனங்களைச் சகித்துக்கொள்ள முடியாது என்றால், புதிய அல்லது சுவாரஸ்யமான எதையும் செய்யாதீர்கள்.

– ராபின் சர்மா –




## கனமழை காரணமாக 18 மாவட்டங்கள் பாதிப்பு



கொழும்பு, ஒக்.27
நாட்டில் கடந்த சில நாள்களாக நிலவும் பாதகமான வானிலை காரணமாக நாடுமுழுவதும் 18 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.
அதன்படி 7,395 குடும்பங்களைச் சேர்ந்த மொத்தம் 29,414 பேர் சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
அதேவேளை தொடர்ச்சியான மழை காரணமாக 11 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கைகள் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.
இதுவரை பெய்த கனமழை காரணமாக நில்வலா கங்கை, ஜின் கங்கை, களு கங்கை மற்றும் அத்தனகலு ஓயாவின் நீர்மட்டம் உயர் மட்டத்தை அடைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மழை தொடரும்

கொழும்பு, ஒக்.27
நாட்டில் எதிர்வரும் நாள்களிலும் மழையுடனான வானிலை தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.
நாட்டில் சில பகுதிகளில் இன்று 100 மில்லிமீற்றர் வரையில் மழை வீழ்ச்சி பதிவாகக்கூடும்.
அதன்படி, மேல், சபரகமுவ, மத்திய, வடமேல், வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என எதிர்வுக் கூறப்பட்டுள்ளது. (ச-இ)

## வெடிபொருள்கள் மதவாச்சியில் மீட்பு



அநுராதபுரம், ஒக்.27
அநுராதபுரம், மதவாச்சி வஹமல்கொல்லேவப் பகுதியில் வெடிமருந்துப்பொருள்கள் மற்றும் 2 வெடிமருந்து உறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
இந்த வெடிமருந்துகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மதவாச்சிப் பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவினரால், கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## 'லைசென்ஸ்' புதுப்பிப்பு கட்டணம் அதிகரிப்பு!

கொழும்பு, ஒக்.27
சாரதி அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பிப்பதற்கான கட்டணத்தை 15 வீதம் அதிகரிக்க அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
சாரதி அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பித்தல் சாதாரண மற்றும் ஒரு நாள் சேவைகளின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது.
சாரதி அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பிப்பதற்கான கட்டண உயர்வு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை இடம்பெறும். அதன்படி இந்த ஆண்டு கட்டணங்களை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## சுங்கத்தில் வாகனங்கள் விடுவிக்க வர்த்தமானி

கொழும்பு, ஒக்.27
சுங்கத்தால் தடுத்துவைக்கப்பட்டிருந்த வாகனங்களை விடுவிக்க அனுமதி அளித்து புதிய வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.
குறித்த வர்த்தமானியை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வெளியிட்டுள்ளார்.
ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தைமீறியதாகத் தெரிவிக்கப்பட்டு, கடந்த மே மாதம் முதல் துறைமுகங்களில் நூற்றுக் கணக்கான வாகனங்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

நாளை
செவ்வாய்க்கிழமை - ஐப்பசி 11
28.10.2025
சுபநேரம் : 10.33 - 12.03
ராகுகாலம் : 03.03 - 04.33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லை சித்த வைத்தியசாலையில் சுற்றுலா வாய்ப்புகளை மேம்படுத்துக

ரவிகரன் எம்.பி. கோரிக்கை

முல்லைத்தீவு, ஒக்.27
முல்லைத்தீவு மாவட்ட சித்த வைத்தியசாலையை சுற்றுலாவாய்ப்புகளுடன் மேம்படுத்துமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து. ரவிகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள மாவட்ட சித்த வைத்தியசாலை, வைத்திய சுற்றுலா வாய்ப்புகளுக்கும், கட்டண அலகுடனான வைத்திய சேவை வழங்கலுக்கும், மூலிகைத் தோட்ட நடைமுறைப்படுத்தலுக்கும் மிகவும் பொருத்தமான இடம்.

ஆண்கள், பெண்களுக்கான விசேட சிகிச்சை அலகு, மருந்தகம், மூலிகைத்தோட்டம், பாரம்பரிய உணவகம், கட்டண அலகுடனான சித்த வைத்திய சேவை வழங்கல், ஆய்வகம் உள்ளிட்ட வசதிகளுக்கான போதுமான இடவசதியையும் மேற்படி வைத்தியசாலைச்சூழல் கொண்டுள்ளது.

எனவே முல்லைத்தீவுமாவட்ட சித்த வைத்தியசாலையின் ஆளணி வள நிரப்பலுக்கு மேலதிகமாக உட்கட்டுமான விருத்தியிலும் கூடுதல் கரிசனை யைக் கொள்ளவேண்டும்- என்றார். (ச-25,246)

## தீவுப் பிரதேச வீதி அபிவிருத்திக்கு 250 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஒக்.27
**வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர் மற்றும் நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில், வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக 250 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச் சித் திட்டத்தில், தீவுப்பகுதியில் வீதி அபிவிருத்தியை நடைமுறைப் படுத்துவதில் எதிர்நோக்கும் இடர் பாடுகள் தொடர்பான கலந்துரையாடல், யாழ்.மாவட்டச் செயலர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

போக்குவரத்து, பெருந்தெருக்கள் துறைமுகம் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சின் விசேட நிதி ஒதுக்கீட்டின்கீழ், யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத் தப்பட்டுவரும் வீதி அபிவிருத்தி வேலைகளின் முன்னேற் றம் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டது.

கிடைக்கப்பெற்ற விசேட நிதி காலதாமதமாகக் கிடைத்தமை, கடல் கடந்த போக்குவரத்து மற்றும் இனிவரப்போகும் பருவகாலமழை காரணமாக வேலைத்திட்டங் களை விரைவாகச் செயற்படுத்துவதில் உள்ள இடர்பாடுகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

வேலணை, ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மேற் கொள்ளப்படவுள்ள வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை விரைவாக முன்னெடுக்கமுடியும். எனினும், நெடுந்தீவுப் பிரதேச செயலர்பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வேலைத்திட்டங்களை மேற்கொள்வதில் இடர்பாடுகள் காணப்படுகின்றன. அதனடிப்படையில் நெடுந்தீவில் முழுமையாக 3 வீதிகளின் வேலைத்திட் டங்களை முன்னெடுக்கமுடியும். வேறு வீதிகளைப் புனரமைப்பது தொடர்பில் ஆராய்ந்து முடிவெடுக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில், யாழ்.மாவட்டப் போக்குவரத்துத் தொடர்பான செயற்குழுவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான க. இளங்குமரன், யாழ்.மாவட்டச்செயலர் ம. பிரதீபன், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சாம்பசிவம் சுதர்சன் மற்றும் அமைச்சின் செயலாளர்கள், பிரதேச செயலர்கள் திணைக்களங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-66)

## துயிலுமில்லத்தில் சிரமதானப் பணி!

கிளிநொச்சி, ஒக்.27
கிளிநொச்சி மாவட்டத்தின் விசுவமடு பகுதியில் அமைந்துள்ள தேராவில் மாவீரர் துயிலுமில்லத்தில் துப்புரவுப் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

எதிர்வரும் நவம்பர் மாதம் 27ஆம் திகதி நடைபெறவுள்ள மாவீரர் நாள் நிகழ்வை முன்னிட்டு இந்தச்சிரமதானம் இடம்பெற்றது.

துயிலும் இல்லத்தில் ஏற்பாட்டுக்குழுவினரால் மண்ணுக்காக மரணித்த மாவீரர்களின் அஞ்சலி செலுத்தப்பட்டு சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (ச-113)





## ஆசிரியர் இடமாற்றத்தில் பெரும் அநீதி இழைப்பு

கிளிநொச்சி ஆசிரியர்கள் போராட்டம்

கிளிநொச்சி,ஒக்.27
வடமாகாணக் கல்வியமைச்சால் 2026 ஆம் ஆண்டுக்கான சேவையின் தேவைகருதிய இடமாற்றத்தில், கிளிநொச்சி ஆசிரியர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. எனவே இடமாற்றத்தை உடனடியாக இரத்துச்செய்யவேண்டும் என்று வலியுறுத்தி, கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் கிளிநொச்சி தெற்கு வலயக் கல்வி அலுவலகம் முன்பாக கடந்த வெள்ளிக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுதொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் தெரிவிக்கையில்,

கொடிய இனவழிப்புப் போர் நிகழ்ந்த சூழலில், உயிரைத் துச்சமென எண்ணி பதுங்கு குழிகளுக்குள்ளும், குண்டுமழை நடுவினிலும் நின்று கடந்த காலங்களில் பணியாற்றினோம். கிளிநொச்சி மாவட்டத்தின் பல பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களைப் பூர்த்திசெய்யாத சூழலில், ஆசிரியவளத்தைச் சிதைக்கும்வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. நியாயப்பாடுகள் எதனையும்கருத்திற்கொள்ளாமல்முன்னெடுக்கப்பட்ட இடமாற்றத்தால், எமது மாவட்டத்தின் கல்வி, மேலும்பின்தள்ளப்பட்டு மாணவர்களின் எதிர்காலம் இருள்மயமாகும். எனவே இந்த இடமாற்றத்தை இரத்துச்செய்யவேண்டும் - என்றனர். (க-113)



## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஒக்.27
சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலய 115ஆவது ஆண்டுபரிசளிப்புவிழாவும் நிறுவுநர் தினமும் எதிர் வரும் 30ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 1 மணிக்கு வித்துவான் வித்தாசலம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. பாடசாலை அதிபர் எம்.சி. சுதாகரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ்ப்பாண தொழில்நுட்பவியல் கல்லூரி பணிப்பாளர் ஆறுமுகம்நற்குணேஸ்வரன், சிறப்பு விருந்தினராக மக்கள் கலை இலக்கியப் பேரவை அமைப்பாளர் சோமசுந்தரம் தேவராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் நிறுவுநர் நினைவுப் பேருரையை சட்டத்தரணி தர்ஷிகா முருகராசா ஆற்றவுள்ளார். (ச)

## தமிழ்மொழி முக்கியத்துவம் புலமைத்துவக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்.27
அரசகரும மொழிகள் திணைக்களம் மற்றும் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் ஆகியன இணைந்து நடத்திய 'தமிழ்மொழியின் வரலாற்று முக்கியத்துவமும் கலாசாரப் பெறுமதியும்' எனும் தொனிப்பொருளிலான புலமைத்துவக் கலந்துரையாடல் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

கலந்துரையாடல் அமர்வில் பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை வாழ்நாள் பேராசிரியர் கலாநிதி சி.பத்மநாதன், யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த் துறை வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், உருகுணைப் பல்கலைக்கழக சிங்களத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. தம்மிக்க ஜயசிங்க, இளம் பேச்சாளர் ஜீவா சஜீவன் ஆகியோர் உரையாளர்களாகக் கலந்துகொண்டு உரையாற்றினர். (ச-41-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவைத் தாக்கினால் உக்ரைன் அழிக்கப்படும்!



## அதிபர் புடின் மிரட்டல்

மொஸ்கோ, ஒக். 27

**உக்ரைன் நீண்டதூர ஏவுகணைகளால் ரஷ்யாவைத் தாக்கினால், உக்ரைன் அழிக்கப்படுவது உறுதி என்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

உக்ரைனுடனான மோதல் தொடர்பில் ரஷ்ய அதிபர் புடின் இன்று நாட்டு மக்களுக்கு உரையாற்றியுள்ளார்.


இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நீண்டதூர ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்தினால், அதற்கு ரஷ்யாவின் பதிலடி கற்பனை செய்துகூட பார்க்கமுடியாததாக அமையும்.

ரஷ்யாமீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடைகள் பாரதூரமானவை. போரைத் தீர்க்கும் முயற்சியாக நாங்கள் இதைப் பார்க்கவில்லை. இறைமைமீது நம்பிக்கையுள்ள எந்த நாடும் இத்தகைய செயற்பாடுகளை ஏற்கப் போவதில்லை. எனவே, அமெரிக்காவின் தடைகளுக்கு ரஷ்யா அடிபணியாது - என்றார். (ம)

## கரூர் உயிரிழப்புகள்

# தமிழக வெற்றிக் கழகத்தின் நிர்வாகிகள் மீதும் வழக்கு?




புதுடில்லி, ஒக். 27

கரூரில் கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்த விடயத்தில், தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகளுக்கு எதிராகவும் வழக்குத்தாக்கல் செய்யப்பட வாய்ப்புள்ளதாகத் தெரியவருகின்றது.

கரூரில் செப்ரெம்பர் மாதத்தின் இறுதியில் விஜய் முன்னெடுத்த தேர்தல் பரப்புரையில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய, மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இந்த வழக்கு விசாரிக்கப்பட்டுவருகின்றது.

இதுவரையான விசாரணைகளின் அடிப்படையில் நீதிமன்றத்தில் முதற்கட்ட அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், தமிழக வெற்றிக் கழகப் பொதுச்செயலாளர் ஆனந்த் உள்ளிட்டோரின் பெயர்கள் காணப்படுகின்றன. இதையடுத்தே, அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட சாத்தியங்கள் அதிகம் உள்ளன எனக் கூறப்படுகின்றது. (ம)



# காஷ்மீரில் பாகிஸ்தானால் கொடூரமான அடக்குமுறை

## இந்தியா குற்றச்சாட்டு

புதுடில்லி, ஒக். 27

பாகிஸ்தானின் ஆளுகைக்கு உட்பட்ட காஷ்மீர் பிராந்தியத்தில் மிகவும் கொடூரமான மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன என்று இந்தியா குற்றஞ்சாட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் விசேட அமர்வுகள் தற்போது நடைபெற்றுவருகின்றன. இந்தியாவின் சிறப்புப் பிரதிநிதி ஹரிஸ், நேற்றைய அமர்வில் உரையாற்றியுள்ளார்.

இதன்போதே, 'பாகிஸ்தானால் கட்டுப்படுத்தப்படும் காஷ்மீர் பகுதியில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன' என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

பாகிஸ்தானின் ஆளுகைக்கு உட்பட்ட காஷ்மீர் பிராந்தியத்தில் இராணுவக் கெடுபிடிகள் நிறைந்துள்ளன. அங்குள்ள மக்கள் காஷ்மீரின் வளங்கள் சூறையாடப்படுவதை எதிர்ப்பதால், அவர்கள் இராணுவ அடக்குமுறைக்கு உள்ளாகின்றனர். இந்த மனித உரிமை மீறல்களுக்குப் பாகிஸ்தான் பொறுப்பேற்க வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் சபைக்கான இந்தியப் பிரதிநிதி மேலும் கூறியுள்ளார். (ம)

## மெல்லக் கொல்லும் விஷத்தால்

# ஈக்வடோரின் அதிபரை கொலைசெய்யச் சதி!

குய்டோ, ஒக். 27

ஈக்வடோரின் அதிபர் டானியல் நோபோவாவை, மெல்லக் கொல்லும் நஞ்சுமூலம் படுகொலை செய்வதற்கு முயற்சிகள் இடம்பெற்றுள்ளன என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அதிபர் டானியல் நோபோவா அண்மையில் பொது நிகழ்வொன்றில் கலந்துகொண்டார். அந்த நிகழ்வில் அவருக்கு வழங்கப்பட்ட சொக்லெட்டிலேயே நச்சு இரசாயனங்கள் இருந்தன என்று அதிபரின் பிரத்தியேக பாதுகாப்புத் துறையினர் தகவல் வெளியிட்டுள்ளனர். அத்துடன், மெல்லக் கொல்லும் நஞ்சும் அந்தச் சொக்லெட்டில் கலக்கப்பட்டிருந்தது என்றும் கூறப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் ஈக்வடோரின் பெருங்குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். அத்துடன், புலனாய்வு விசாரணைகளும் இடம்பெற்றுவருகின்றன. இந்தப் படுகொலை முயற்சிகளைத் தொடர்ந்து, அதிபர் டானியல் நோபோவாவின் பாதுகாப்புப் பலமடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. (ம)



# நீண்டகாலப்பிரச்சினைகள் உடன் தீர்க்கப்படவேண்டும்

## ஐ.நா. வலியுறுத்து



வொஷிங்டன், ஒக். 27

தீர்க்கப்படமுடியாத நீண்டகாலப் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு உலகநாடுகள் கவனம்செலுத்த வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் வலியுறுத்தியுள்ளார்.

2025ஆம் ஆண்டுக்கான ஐக்கிய நாடுகள் தினத்தை முன்னிட்டு, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம்குட்ரஸ்விசேடஅறிக்கையை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

ஐக்கிய நாடுகள் சபை என்பது வெறும் நிறுவனம் மட்டுமல்ல. அது, எல்லைகளைத் தாண்டி, கண்டங்களை இணைத்து, தலைமுறைகளுக்கு எழுச்சியூட்டுகிறது. எண்பது ஆண்டுகளாக, அமைதியைக் கட்டியெழுப்பவும், வறுமையைக் கையாளவும், மனித உரிமைகளை மேம்படுத்தவும் நாங்கள் உழைத்துள்ளோம்.

எந்தவொரு நாட்டாலும் தனியாகத் தீர்க்கமுடியாத பிரச்சினைகள் தற்போது அதிகரித்துள்ளன. உலகம் ஒன்றுபடவேண்டிய நேரமிது. அனைத்து மக்களும், அமைதியான வாழ்க்கைக்குத் தகுதியானவர்கள் என்ற அடிப்படையில் உலக நாடுகள் செயற்படவேண்டும் - என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐஸ் போதை விற்பனை; ஓய்வுபெற்ற ஆசிரியர் கைது

கொழும்பு, ஒக்.27

தனது மருமகனுடன் இணைந்து ஐஸ் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டார் என்ற குற்றச் சாட்டில் 67 வயதான ஓய்வுபெற்ற ஆசிரியை ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கம்பளை, உலப்பனைப் பகுதியிலுள்ள அவர்களது வீடு சோதனைக்குட்படுத்தப்பட்டபோது 200 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன் போதைப்பொருள் விற்பனைக்குப் பயன் படுத்தப்பட்ட இரு தொலைபேசிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை குறித்த ஓய்வுபெற்ற ஆசிரியையின் மகன் கடந்த 24ஆம் திகதி ஐஸ் மற்றும் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-44)

# போதைப்பொருள் வியாபாரிகள் 23 வெளிநாட்டவர் அடையாளம்

கொழும்பு, ஒக்.27

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு போதைப்பொருள் கடத்தும் பிரதான வியாபாரிகள் 23 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.



இவர்களில் பெரும்பாலானவர்கள் பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர்கள் எனவும், பல்வேறு நாடுகளில் தலைமறைவாகி இருந்து குழுக்கள் ஊடாகவே போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது..

அத்துடன் ஆர்ஜென்டினா, ஈரான், இந்தியா போன்ற நாடுகளில் இருந்தும் போதைப்பொருள் கடத்தப்படுகின்றது. வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு போதைப் பொருள் கடத்தும் கும்பலில் சில இலங்கையர்கள் உள்ளனர்.

அதேவேளை, இலங்கையில் குற்றச்செயல்களில் ஈடுபட்டுவிட்டு வெளிநாடுகளுக்குத் தப்பியோடியுள்ள பாதாளக்குழு உறுப்பினர்களை நாட்டுக்குக் கொண்டுவருவதற்குரிய பாதுகாப்பு, இராஜதந்திர நடவடிக்கையும் தீவிரப்படுத்தப் பட்டுள்ளது.

பாதாளக் குழுச் செயற்பாடு மற்றும் போதைப்பொருள் வியாபாரம் என்பவற்றுக்கு முற்றுப்புள்ளி வைப்பதில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உறுதியாக உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)



# மாடுகளைத் திருடியவர்கள் இளையோரால் மடக்கிப்பிடிப்பு

மன்னார், ஒக்.27

மன்னார் மாவட்டம் நானாட்டான் பிரதேசத்தில் மாடுகளைத் திருடிய நபர்களை அந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் மடக்கிப்பிடித்து மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

நானாட்டான் பிரதேசத்தின் உமநகரி வீதியில் இரவு மாடுகளைக்கொண்டு செல்வதாகச் சந்தேகிக்கும் வகையில் ஓட்டோவில் சுற்றித்திரிந்த மூவர் அப்பகுதி இளைஞர்கள் சிலரை பார்த்துத் தப்பியோடியுள்ளனர்.

எனினும் கிராமத்து இளைஞர்கள் அவர்களைத் துரத்திச் சென்று மன்னார் தள்ளாடி பெரிய பாலத்தடியில் பிடித்து மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகைதந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (ச-213)

# மோட்டார் சைக்கிள் - பவுசர் விபத்தில் இளைஞர் பலி!

கொழும்பு, ஒக்.27

மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் பெற்றோல் பவுசரை முந்திச் செல்ல முற்பட்டவேளை யில் பவுசர் சில்லுக்குள் சிக்கி உயிரிழந்துள்ளார்.

இந்தக் கோர விபத்து கொழும்பு கொலன்னாவ வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. குறித்த இளைஞர் பவுசரை முந்திச்செல்ல முற்பட்டு மோட்டார் சைக்கிளைச் செலுத்தியுள்ளார். அதன்போதே மோட்டார் சைக்கிள் சறுக்கிய நிலையில் இளைஞர், பவுசர் சில்லுக்குள் சிக்கி விபத்துக்குள்ளாகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். விபத்துத் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச)



# நடுக்கடலில் தத்தளித்த கப்பல்; இலங்கை உதவிக்கரம்

கொழும்பு, ஒக்.27



இலங்கைக்குத் தெற்கே உள்ள கடற்பகுதியில், தொழில்நுட்பக் கோளாறால் நடுக்கடலில் சிக்கிய வர்த்தகக் கப்பலின் 14 பணியாளர்களை இலங்கைக் கடற்படை மீட்டுள்ளது.

வியட்நாமில் இருந்து எகிப்து நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த வர்த்தகக் கப்பல், இலங்கைக்கு தெற்கே சுமார் 100 கடல் மைல் தொலைவில் தொழில்நுட்பக்கோளாறு காரணமாக தத்தளித்தபோதே இலங்கைக் கடற்படை உதவியுள்ளது. மீட்கப்பட்ட அந்தக் குழுவினர் தற்போது ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு அழைத்துவரப்பட்டனர் என்றும் கடற்படை தெரிவித்துள்ளது. (ச-இ)


## யாழ்ப்பாணம் செங்குந்தா சந்தைக்கடைகள் Stage 1,2,3 கல்வியங்காடு, குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கான விலை மனுக்கோரல்

## யாழ்ப்பாண மாநகரசபை

1. யாழ்ப்பாணம் செங்குந்தா சந்தைக்கடை, கல்வியங்காடு கீழ்வரும் கடைத் தொகுதிகள் குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கான விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

| கடை இல | அளவு | மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் மூன்று மாத வாடகை (வரி நீங்கலாக) | 20 வருட வாடகை (Key Money) (வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| Stage1- கீழ்தளம் | | | |
| 01 | 883sq.ft | 90,000.00 | 7,200,000.00 |
| Stage2- கீழ்தளம் | | | |
| 06 | 146sq.ft | 6,750.00 | 540,000.00 |
| 09 | 124sq.ft | 13,500.00 | 1,080,000.00 |
| Stage1 ,2, 3- மேற்தளம் மண்டபம் | | | |
| 01 | 2329sq.ft | 195,000.00 | 15,600,000.00 |

2. சமர்பிக்கப்படும் விலைமனுக்களில் கோரப்பட்ட அதிகூடிய விலையைக் கவனத்தில் கொண்டு குத்தகைதாரர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
3. கேள்வி விண்ணப்பம் பெறுபவர் தேசிய அடையாள அட்டைப்பிரதி மற்றும் வதிவிடத்தினை உறுதிப் படுத்தும் கிராமசேவை உத்தியோகத்தரது கடிதம் என்பன சமர்ப்பிக்க வேண்டும்.
4. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவே ஏற்பதற்கும் நிராகரிப்பதற்கும் கேள்விசபைக்கு அதிகாரம் உண்டு.
5. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற விண்ணப்பதாரிகள் குறித்த விபரங்கள் உள்ளடக்கிய விண்ணப்பங்களை, மீளளிக்கப்படாத ரூபா1,000.00 + vat 18% இனை செலுத்தி மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் 27.10.2025 ஆம் திகதி முதல் 13.11.2025 ஆம் திகதி வரை வாரத்தில் வேலை நாட்களில் மு.ப 9.00 முதல் பி.ப 2.30 வரையான காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.
6. விண்ணப்பதாரர் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் தொகையை பிணைமுறியாக செலுத்துதல் வேண்டும்.
7. விலை மனுக்களை ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும் / நானாவித இறைவரிப்பகுதியில் கேள்விப் படிவங்களை ஏற்கும் பெட்டியில் இடுமாறு கோரப்படுகின்றது. அத்துடன் தபால் உறையின் மேல் மூலையில் கேள்வியின் விபரம் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
8. விலை மனுக்களை ஏற்றல் 14.11.2025 ஆம் திகதி மு.ப10.00 மணிக்கு முடிவடைந்ததுடன் மாநகர சபையின், பௌதிக திட்டமிடல் கேட்போர் கூட்டத்தில் 14.11.2025 ஆம் திகதி மு.ப10.00. மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் இதற்கு சமுகமளித்தல் வேண்டும்.
9. இதுபற்றிய மேலதிக தகவல்கள் அல்லது நிபந்தனைகள் தேவைப்படின் யாழ்ப்பாணம் மாநகர சபை நானாவித இறைவரிப்பகுதியின் 021-221 5978 தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்வதன் மூலம் அல்லது அலுவலக நேரங்களில் தகவல்களை பெற்றுக் கொள்ளலாம்.

மாநகர முதல்வர்
மாநகரசபை
யாழ்ப்பாணம்

(CR/46163) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமெரிக்க அதிபர் தேர்தலில் மீண்டும் போட்டியிடத் தயார்

## கமலா ஹரிஸ் அறிவிப்பு

வொஷிங்டன், ஒக். 27

அமெரிக்க அதிபர் தேர்தலில் மீண்டும் போட்டியிடுவதற்குத் தயாராக உள்ளதாக, கடந்த தேர்தலில் ட்ரம்பை எதிர்த்துப் போட்டியிட்டவரான கமலா ஹரிஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஊடகமொன்றுக்கு கமலா ஹரிஸ் நேர்காணல் வழங்கியுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமெரிக்காவில் பெண்ணொருவர் அதிபராகப் பொறுப்பேற்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க திருப்பம் மிகவிரைவில் நடைபெறும். வெள்ளைமாளிகையில் பெண்ணொருவர் அதிபராக இருப்பதை எனது பேரப்பிள்ளைகள் நிச்சயம் பார்ப்பார்கள் என நம்புகின்றேன். அது நானாகக்கூட இருக்கலாம். அரசியலில் எனது எதிர்காலம் முற்றுப்பெறவில்லை. எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் விரைவில் அறிவிப்பேன்.

அதிபர் ட்ரம்ப் சர்வாதிகார முறையில் நாட்டை ஆட்சி செய்கின்றார். அமெரிக்க மரபுகளுக்கு முரணாகவும், ஜனநாயகப் பிறழ்வாகவும் அவருடைய ஆட்சி அமைந்துள்ளது - என்றார். (ம)

### வீடு வாடகைக்கு (3 Bed Rooms)

இடம்: ஆடியபாதம் வீதி, கறிவேப்பிலை லேன், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

மாத வாடகை : Rs. 40,000.00
Advance : Rs. 200,000.00

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்
0094753645193
(Whatsapp இல் மட்டுமே தொடர்பு கொள்ள முடியும்)

(CS 4273) A

## ஓராண்டு நினைவேந்தல்



கலாபூஷணம் செல்வி
**தங்கலட்சுமி செல்லத்துரை**
(ஓய்வுபெற்ற ஆசிரியர் - யாழ் இந்துக் கல்லூரி, சங்கீத பூஷணம் - அண்ணாமலை பல்கலைக்கழகம்)

இசைக்குயில் ஒன்று இளைப்பாறியதோ
இந்துக் கல்லூரியின் இனியகானம் ஓய்ந்ததுவோ
இனிமையாகப் பேசி இன்முகத்துடன் வரவேற்கும்
இனிய முகம் மறைந்ததுவோ
இனியொரு இனிமைக்குரல் கேட்க உள்ளம்
ஏங்குதம்மா
இறைவன் அடியில் இங்கிதமாய் இசைக்க
சென்றீர்களோ

என்றும் உங்கள் நினைவுடன் ஏங்கும்
குடும்பத்தினர்

### உளவளத்துணையாளர் பணிக்கான விண்ணப்பங்கோரல்

கிளிநொச்சி ஜெயந்திநகரில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் பணியாற்றுவதற்கு ஆண், பெண் உளவளத்துணையாளர்கள் தேவை. பின்வரும் தகைமைகளினை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. பணியாற்ற விரும்புவோர் 03.11.2025 இற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு தங்களது விண்ணப்பத்தினை பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். விண்ணப்ப முடிவுத்திகதியின் பின்னர் விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத் தேர்விற்கான திகதி அறிவிக்கப்படும்.

**தகைமைகள்**

1. க.பொ.த உயர்தர சித்தியுடன் உளவியல் துறையில் டிப்ளோமா அல்லது பட்டத்தினைப் பெற்றிருத்தல்
2. வயதெல்லை 25-50 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
3. தங்கியிருந்து கடமையாற்றுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4. தொழில் முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

அனுப்பவேண்டிய முகவரி
தலைவர்,
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,
ஜெயந்திநகர்,
கிளிநொச்சி
0214923118 / 0773240950

## மரண அறிவித்தல்

தோற்றம்
20 . 09 . 1948



மறைவு
20 . 10 . 2025

### சுந்தரலிங்கம் இராசதுரை

அரியாலையை பிறப்பிடமாகவும் ஒஸ்லோ நோர்வே நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் இராசதுரை அவர்கள் கடந்த 20.10.2025 திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை - இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தனபாலரட்னம் (அன்பு வைத்தியர்) - பரமேஸ்வரி தம்பதிகளின் மருமகனும், றஞ்சிதாவின் பாசமிகு கணவரும், Dr.சுதர்சன் (புற்றுநோயியல் நிபுணர்), Dr.றஜிதா ஆகியோரின் தந்தையும் கௌரி, காயத்ரி, பிஸ்மா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற சறோஜினி (இலங்கை), பாலசந்திரன் (London), சித்ரா ஹரிநேசன் (Australia), தேவகுமார் (Canada), யசோதா, ஏகாம்பரதாசன் (London) ஆகியோரின் சகோதரனும், பிரமிளாதேவியின் மாமனாரும், சித்ரா மகாதேவா (London), காலஞ்சென்ற பாலகுமார் (America) மற்றும் றேணுகா ஜம்புலிங்கம், காலஞ்சென்ற சரவணபவன் மற்றும் ஹரிநேசன், மோகனரஞ்சி (மாலா), ஏகாம்பரதாசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் இன்று திங்கட்கிழமை (27.10.2025) காலை 08:00 மணி முதல் 11:45 வரை Alfaset Kapell இல் நடைபெற்று Alfaset krematorium இல் மதியம் நண்பகல் 12.00 மணிக்கு தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**

பாலச்சந்திரன் : 00447792595762
தேவகுமார் : 0016474074110
சித்ரா : 0061439474804
யசோதா : 00447988588172

**தகவல்:**
மனைவி, மக்கள்,
உற்றார் உறவினர்

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
28 . 08 . 1983



மறைவு
17 . 11 . 2015


### மகேந்திரராசா கௌசலன்

என் அன்பு மகனே!
பிரிவின் வலியைத் தாங்க முடியவில்லை
நீ என்னோடு இருந்த காலங்கள் இன்றும் என் நினைவில்
உன் நினைவுகளோடு ஒவ்வொரு நாளும் உன்னைத் தேடுகின்றேன்.
நீ எங்கும் செல்லவில்லை, என் இதயத்தில் உன் சிரித்த முகத்தையும்,
நீ பேசிய வார்த்தைகளையும் பொக்கிசமாய் சேகரித்து வைத்துள்ளேன்.
உனக்கு விருப்பமான செயல்களை நான் ஆசையாக செய்து வருகிறேன்.
என் மனம் முழுவதும் நீயே நிறைந்திருக்கிறாய்.
என் அன்பு மகனே! நான் உன்னை இன்னும்
அதிகமாக நேசிக்கிறேன். இந்த வலி தீரும் வரை
நான் உன்னை நினைத்துக் கொண்டிருப்பேன்.
நீ மீண்டும் என் வாழ்வில் மகனாய் வருவாய்
என நம்புகிறேன். அதுவரை நீ என்னுள் வாழ்வாய்.

(CS 59724) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெல்வேலி அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஆலயத்துக்கு இராஜகோபுரம் அமைப்பதற்கான அடிக்கல் நடுகை செய்யும் நிகழ்வு அண்மையில் சிறப்பாக இடம்பெற்றது. (ச-25, 17)





கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் வாராந்த ஒன்றுகூடல் நிகழ்வு கலாசாலையின் ஆங்கிலநெறிப்பிரி வினரின் ஏற்பாட்டில் கலாசாலை முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. (ச-41-66)



வாகனங்களின் தர நிலைமை தொடர்பில் கிளிநொச்சிப் பொலி ஸார் மற்றும் மாவட்ட மோட்டார்ப் போக்குவரத்துத் திணைக்களப் பரிசோதகர்கள் இணைந்து அண்மையில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ச-113)



தீபாவளியை முன்னிட்டு மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை விஷேட பூஜைகள் இடம்பெற்றன. திருக்கேதீஸ்வர ஆலய பிரதமகுரு கருணாநந்தக் குருக்கள் கிரியை களை நடத்திவைத்தார். (ச-25, 56)





தென்மராட்சிப் பிரதேச கைதடி சமுர்த்தி வங்கிக்கு உட்பட்ட ஜே/291, ஜே/294 ஆகிய கிராம அலுவலர் பிரிவு களைச் சேர்ந்த முன்பள்ளி மாணவர்களுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை சத்துணவு வழங்கப்பட்டது



வட்டுக்கோட்டை

# பொலிஸ் நிலையத்தில் உணவு அறை திறப்பு!

யாழ்ப்பாணம், ஒக்.27

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் உணவு அறை அண்மையில் திறந்து வைக் கப்பட்டது. அரசாங்கத்தால் பொலிஸ் நிலையங்களுக்கு ஒதுக்கப்பட்ட விசேட நிதியில் இந்த உணவு அறை அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கொஸ்தா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ் வில் யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எஸ்.ஜயமால் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

7ஆம் திகதி நிதி அமைச்சர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. ஜனாதிபதியின் வரவு - செலவுத் திட்ட உரைக்கு அனுமதி பெறுவதற்காக விசேட அமைச்சரவைக் கூட்டம் நடக்கவுள்ளது.

ஜனாதிபதியின் வரவு - செலவுத் திட்ட உரை 2ஆம் வாசிப்பாக கருதப்படும். 2ஆம் வாசிப்பு மீதான விவாதம் நவம்பர் மாதம் 8 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதிவரை நடைபெறும். 14 ஆம் திகதி மாலை 2ஆம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடத்தப்படும்.

அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் நவம்பர் மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாகும். வரவு - செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி நடைபெறும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அரச மொத்த செலவினமாக 4 ஆயிரத்து 434 பில்லியன்ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது. (அ-எ-44)

## சிறார்களின்...

சரோஜா போல்ராஜ் தெரிவித்துள்ளார். 12 வயதுக்குட்பட்ட சிறார்கள் கைபேசிகள் வைத்திருப்பதையோ அல்லது பயன்படுத்துவதையோ தடுப்பது தொடர்பாக அரசாங்கம் ஒரு முடிவை எடுக்கும்.

இந்த நடவடிக்கை குழந்தைகளை அதிகப்படியான திரை நேரத்திலிருந்தும், தீங்கு விளைவிக்கும் இணைய உள்ளடக்கங்களுக்கு ஆளாகாமல் பாதுப்பதையும், ஆரோக்கியமான குழந்தைப் பருவவளர்ச்சி மற்றும் சமூகத் தொடர்புகளை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ-எ-இ)

## காங்கேசன்துறை...

அறிவிக்கப்பட்டுள்ளது. சீரற்ற வானிலை முன்னறிவிப்பால் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் எதிர்வரும் 28ஆம் திகதிவரை திட்டமிடப்பட்டிருந்த பயணங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்றும் படகுச்சேவையை நடத்தும் நிறுவனம் அறிவித்துள்ளது. (அ-எ-இ)

## கடந்த...

மேற்கொள்ளப்பட்ட ஒரு இலட்சத்து 91 ஆயிரத்து 320 சுற்றிவளைப்புகளில், போதைப்பொருள் தொடர்பில் ஒரு இலட்சத்து 90 ஆயிரத்து 938 பேர் சந்தேகத்தின் அடிப் படையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கையில் 60 இலட்சத்து 19 ஆயிரத்து 343க்கும் அதிகமானவர்கள் சோதனையிடப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் வகைகளில் 2 ஆயிரத்து 539.5 கிலோவுக்கும் அதிகமான ஐஸ் கைப்பற்றப்பட்டு, அவை தொடர்பாக 66 ஆயிரத்து 593 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஆயிரத்து 482.8 கிலோகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டு 58 ஆயிரத்து 130 வழக்குகளும், 14 ஆயிரத்து 434.4 கிலோகிராம் கஞ்சா மற்றும் கேரளக் கஞ்சா என்பன கைப்பற்றப்பட்டு 58 ஆயிரத்து 724 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

32.6 கிலோகிராம் கொக்கெய்ன் கைப்பற்றப்பட்டு 91 வழக்குகளும், 30 இலட்சம் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டு 2 ஆயிரத்து 808 வழக்குகளும், 575 கிலோகிராம் வேறு போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டு ஆயிரத்து 474 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சுற்றிவளைப்புகளில் ரி-56 ரக துப்பாக்கிகள், கைத்துப்பாக்கிகள் மற்றும் ரிவோல்வர்கள் உட்பட மொத்தமாக 2 ஆயிரத்து 97 துப்பாக்கிகள் பாதுகாப்புப் பிரிவால் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## மாகாண...

நகர்வாக 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை மக்கள் நலன் சார்ந்த வரவு - செலவுத் திட்டமாக முன்வைப்பதற்கு அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. மக்களுக்கு நேரடியாக தாக்கம் செலுத்தும் விதத்தில் புதிய வரிகள் எதுவும் வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படாது என்று தெரியவருகின்றது.

போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் பாதாளக்குழுக்கள் ஒடுக்கல் போன்ற செயற்பாடுகளால் மக்கள் மத்தியில் அரசாங்கத்துக்கு ஆதரவு ஏற்பட்டுள்ளது. அதையும் ஒரு வாய்ப்பாக கருதி விரைவில் தேர்தலுக்கு செல்வதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

அதேவேளை, மாகாணசபைத் தேர்தல் சம்பந்தமாக வரவு - செலவுத் திட்டக்கூட்டத்தொடருக்கு மத்தியில் கட்சி தலைவர்கள் கூட்டத்தையும் ஜனாதிபதி நடத்தவுள்ளார். எந்த முறையில் தேர்தலை நடத்துவது என்பது தொடர்பான உறுதியான முடிவொன்றை எடுப்பதற்காகவே இந்தக் கூட்டம் நடத்தப்படவுள்ளது என்று அறியமுடிகின்றது. (அ-எ-44)

## மருந்தாளர்...

மாக அரசாங்க மருத்துவமனைக்கு வரும் நோயாளர்கள் மருந்துகளைப் பெறுவதற்கு நீண்டநேரம் வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளது என்றும் அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஐந்து ஆண்டு காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட மருந்தாளர்களின் எண்ணிக்கை புதுப்பிக்கப்படாமையே இந்த நெருக்கடிக்குக் காரணம். மருந்துவக் கல்வியை நிறைவு செய்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் தற்போது வேலையின்றி உள்ளனர். அவர்களை ஆள்சேர்ப்புச் செய்வதற்கு சுகாதார அமைச்சிடம் முறையான அமைப்பு இல்லை. கடந்த மூன்று ஆண்டுகளாக எந்தப் பட்டதாரிகளும் ஆள்சேர்ப்புச் செய்யப்படவில்லை என்றும் அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (அ-எ-இ)

## இலங்கையை...

கப்பட்டுள்ளதாவது:-

தெற்காசியாவில் நேபாளம் மற்றும் இந்தியாவுடன் ஒப்பிடும்போது, அதிக செயற்கை நுண்ணறிவு பயன்படுத்துவோர் கொண்ட தொழிலாளர் சக்தியைக் கொண்ட நாடுகளாக பூட்டானும் இலங்கையும் மாறியுள்ளன.

ஆயினும் தெற்காசிய நாடுகளில் செயற்கை நுண்ணறிவை மனித நிரப்பியாக அதாவது மனித திறன்களுடன் தொழில்நுட்பத்தைச் சேர்ப்பதில் இலங்கை குறைந்த இடத்தில் உள்ளது. திறன்களை மேம்படுத்தாமல் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு விரைவுபடுத்தப்பட்டால் வேலை இழப்புகள் ஏற்படும்.

இலங்கையில் செயற்கை நுண்ணறிவு தொடர்பான வேலைவாய்ப்புச் சந்தை, தெற்காசியாவில் உள்ள மற்ற நாடுகளைவிட வேகமாக விரிவடைந்து வருகிறது. 2025 ஆம் இந்த ஆண்டில் இலங்கையில் உள்ள அனைத்து தொழில்முறை மற்றும் நிர்வாக வேலைவாய்ப்பு அறிவிப்புகளில் 7.3 சதவீதத்துக்கு செயற்கை நுண்ணறிவு தொடர்பான திறன்கள் தேவைப்பட்டுள்ளன. இது பிராந்தியத்திலேயே அதிகபட்ச பங்காகும். இந்தியாவில் இது 5.8 சதவீதத்தைத் தாண்டுகிறது.

இலங்கையின் நிதித்துறை, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்முறை சேவைகளுக்கு செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இலங்கையில் வலுவான செயற்கை நுண்ணறிவு வேலைவாய்ப்புச் சந்தை இருக்க வேண்டும்.

அதேவேளை, செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு காரணமாக தெற்காசியா முழுவதும் உள்ள வேலைவாய்ப்புகளில் சுமார் 7 வீதம் அதிக ஆபத்தில் உள்ளன. அழைப்பு மைய அதிகாரிகள், கணக்காளர்கள், ஒப்பு நோக்குபவர்கள், கணினி மென்பொருள் போன்ற பணிகளுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்புகளில் ஏற்கனவே சரிவு காணப்படுகின்றது - என்றுள்ளது. (அ-எ-ச-இ)

## வெலிகம...

இவர் மஹரகம, நாவின்ன பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அரச புலனாய்வுச் சேவையின் ஆதரவுடன் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு ஆகியவை இணைந்து முன்னெடுத்த சோதனை நடவடிக்கையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-இ)

## போதைப்பொருள்...

இயக்கம்' என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு சுகததாச மைதானத்தில் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் துஷ்பிரயோகம் தொடர்பான தேசிய சபை, மாவட்ட சபைகள், பிராந்திய சபைகள் மற்றும் பொதுப்பாதுகாப்புக் குழுக்கள் ஆகிய நான்கு முக்கியமான துறைகள் இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு ஒன்றிணையவுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-எ-இ)

## இறுக்கமான...

நாட்டில் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள்கள் தாராளமாகப் புழக்கத்தில் விடப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டுள்ள சமூக மட்ட அமைப்புக்கள் கடந்த கால அரசாங்கங்கள் அது தொடர்பில் எடுக்க விரும்பாதிருந்தனஎன்றும்சுட்டிக்காட்டியுள்ளன. தற்போதைய அரசாங்கம் போதைப்பொருள் ஒழிப்பில் கூடிய கரிசனையைக் கொண்டுள்ளது. தெற்கில் போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பாக காத்திரமான நடவடிக்கைகள் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. வடக்கில் போதைப்பொருள் தொடர்பானகைதுகள்முன்னெடுக்கப்பட்டாலும், போதைப்பொருள் பரவலின் சூத்திர தாரிகள் கண்டறியப்பட்டு கைது செய்யப்படுவதுடன், போதைப்பொருள் வலையமைப்புகளை முற்றாக ஒழிக்கும் வகையிலான காத்திரமான நட வடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள் அபாய வலயங்களாக உள்ள பகுதிகளில் விசேட போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். அதேநேரம், பாடசாலை மாணவர்கள், உயர்தர மாணவர்களை இலக்குவைத்து நடக்கும் போதைப்பொருள் விற்பனைகளை ஒடுக்குவதற்குரிய நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும்.

போதைப்பொருள் ஒழிப்பு தேசிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில், வடக்கு மாகாணத்தில் கூடுதலான அவதானம் செலுத்தி போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சமூக மட்ட அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ் நகரின் மத்தியில் (Stanly Road) 8 அறைகளுடன் கூடிய புதிதாக புனரமைக்கப்பட்ட வீடு வாடகைக்கு உண்டு. தொழில் நிறுவனங்கள் நடாத்துவதற்கும், தங்கி இருந்து படிப்பவர்கள் மற்றும் தங்கி வேலை செய்பவர்களுக்கும் உகந்தது.

பார்வையிடும் நேரம் :
மாலை 04.30 இற்குப் பின்னர்

தொடர்புகளுக்கு:
077 900 4515 / 077 199 9608

## வேலையாள் தேவை

யாழ் ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள உணவகத்திற்கு சமையல் வேலை செய்யக்கூடிய பெண் ஒருவர் தேவை.

076 653 3814




# யாழ்.பல்கலை ஊழியர் பிரச்சினை நேரடித் தலையீட்டில் தீர்க்கப்படும்!

## துணைவேந்தர் உறுதியளிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.27

யாழ்.பல்கலைக்கழகப் போதனைசாரா ஊழியர்களின் பிரச்சினைகள் தொடர்பில் சிறப்புக் கவனம்செலுத்தி, தாமே நேரடியாகக் கையாண்டு, ஓரிரு வாரங்களுக்குள் தீர்வுகளை வழங்குவதாக துணைவேந்தர் உறுதியளித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் போதனைசாரா ஊழியர்கள், துணைவேந்தரை அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கலந்துரையாடலில் ஊழியர்கள், தரப்பில் முன்வைக்கப்பட்ட நியாயங்களையும் பிரச்சினைகளையும் துணைவேந்தர் ஏற்றுக்கொண்டதுடன், பல்கலைக்கழக நிர்வாகத்தினால் வெளியிடப்பட்ட பத்திரிகைச் செய்தி உட்பட சில விடயங்கள் தனக்கு தெரியாதவை எனவும், உண்மை நிலைமையை அறிய எடுத்த முயற்சிகள் பாராட்டுக்குரியது என்றும் தெரிவித்தார். (ச-இ)

# சிறுபான்மையினருக்கு எதிராக வெறுப்பை விதைக்கும் ஆர்.எஸ்.எஸ்



சென்னை, ஒக். 27

தமிழகத்தில் சிறுபான்மை மக்களுக்கு எதிரான வெறுப்பு அரசியலை ஆர்.எஸ்.எஸ் விதைத்துவருகின்றது என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித்தலைவர் திருமாவளவன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாநாடொன்று, தஞ்சாவூரில் நேற்று இடம்பெற்றது. இதில் திருமாவளவன் கலந்து கொண்டு உரையாற்றினார். இதன்போதே, 'சிறுபான்மை மக்களுக்கு எதிரான வெறுப்பு அரசியல் தமிழகத்தில் ஆழமாக முன்னெடுக்கப்படுகின்றது. இதற்காக ஆர்.எஸ்.எஸ். அமைப்பும், பா.ஜ. க.வும் தீவிரமாகச் செயற்படுகின்றன' என்று கூறியுள்ளார்.

12 ஆண்டுகளாக பா.ஜ.க. ஆட்சியில் இருப்பதற்கு ஆர்.எஸ்.எஸ். அமைப்பு மட்டும்தான் காரணம். அத்துடன், இந்தியாவின் குடியரசுத் தலைவரைப் பா.ஜ.க. தேர்ந்தெடுப்பதில்லை.

மாறாக, ஆர்.எஸ்.எஸ் அமைப்பே தேர்ந்தெடுக்கின்றது. இதனை எவராலும் மறுத்துரைக்கமுடியாது என்றும் திருமாவளவன் தெரிவித்துள்ளார். (ம)



சூரசங்கார உற்வசத்தை முன்னிட்டு நேற்று நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் சூரன் திக்விஜயம் நடைபெற்றது. (எ-40-17)

# வெலிகம தவிசாளர் கொலை; டுபாயில் இருந்துவந்த உத்தரவு

கொழும்பு, ஒக்.27

வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் லசந்த விக்ரமசேகரவின் கொலையுடன் தொடர்புடைய துப்பாக்கிதாரி என நம்பப்படும் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர் பொலிஸாருக்குப் பல்வேறு தகவல்களை வெளிப்படுத்தும் காணொலிக் காட்சிகள் வெளியாகியுள்ளன.

அந்தக் காணொலியில், துப்பாக்கிச் சூட்டை நடத்த டுபாயிலிருந்து உத்தரவு கிடைத்தது என்று சந்தேகநபர் கூறுகிறார். வெளிநாட்டிலுள்ள ஒரு தனிநபரிடமிருந்து கிடைத்த அறிவுறுத்தலின் பேரில், தான் செயற்பட்டதாக அவர் பொலிஸ் அதிகாரிகளிடம் தெரிவிப்பது அந்த காணொலியில் பதிவாகியுள்ளது.

இந்தநிலையில் இந்தச் சம்பவத்துக்கான முழுமையான நோக்கத்தைக் கண்டறியவும், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலதிக நபர்களை அடையாளம் காணவும் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-இ)

# சூரசம்ஹாரம்

யாழ்ப்பாணம், ஒக்.27

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை சூரசம்ஹாரம் இடம்பெற உள்ளது.

கந்தசஷ்டி விரதத்தின் இறுதி நாளான இன்று மாலை 4.30 மணிக்கு பூசை ஆரம்பமாகி தொடர்ந்து 5 மணிக்கு சூரசங்ஹாரம் ஆரம்பமாக உள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-100)

# புயலாக மாறும் தாழமுக்கம் வடக்கில் மிதமான மழை

யாழ்ப்பாணம், ஒக்.27

வங்காள விரிகுடாவில் உருவாகிய தாழமுக்கம் தற்போது ஆழ்ந்த காற்றமுத்த தாழ்வு மண்டலமாக முல்லைத்தீவிலிருந்து கிழக்கு வடகிழக்குத் திசையில் 606 கிலோமீற்றர் தொலைவில் காணப்படும் நிலையில் இன்று திங்கட்கிழமை அதிகாலை அது புயலாக மாற்றமடையும் என்று எதிர்வுகூறப்படுகின்றது.

இதனால் நாளை செவ்வாய்க்கிழமை வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது என்றும், இன்று அதிகாலை அல்லது காலை முதல் பரவலாக மழை கிடைக்கும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலை ஆய்வாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

மீண்டும் வடக்கு வங்காள விரிகுடாவில் மியன்மாருக்கு அருகில் எதிர்வரும் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மீண்டுமொரு புதிய தாழமுக்கம் உருவாகும் வாய்ப்புள்ளது. இது மேற்குத் திசை நோக்கி நகருமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், இதன் நகர்வுத் திசை மற்றும் ஏனைய விபரங்களை அடுத்த சில நாள்களின் பின்னரே உறுதிப்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-66)

# கந்தசஷ்டி வழிபாடு

யாழ்ப்பாணம், ஒக்.27

தம்பசிட்டி மலையந்தோட்டம் அருள்மிகு முருகன் கோவிலில் கந்தசஷ்டி திருவிழாவின் ஆறாம் நாள் பூசை வழிபாடுகள் இன்று திங்கட்கிழமை இடம்பெற உள்ளது.

கந்தசஷ்டி விரதத்தின் இறுதி நாளான இன்றைய தினம் பி.பகல் 2 மணிக்கு அபிசேகம் இடம்பெற்று தொடர்ந்து பூசை வழிபாடுகள் இடம்பெற்று விரதகாரர்களுக்கு இளநீர் பிரசாதம் வழங்கப்படவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை பாரணை பூசை இடம்பெற்று அன்ன தானம் வழங்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-100)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.